1975 நவம்பர் 5]

செலவில் சைதாப்பேட்டை மண்டலப் பொறியாளரால் திட்டப் பட்ட திட்டத்தை மீனள இயக்குநர் அரசு அனுமதிக்கு அனுப்பி யுள்ளார். நிதிநிலை சரியானதும் செயல்படுத்தப்படும்.

மானாமதுரையிலுள்ள ஊமை, செவிடர் பள்ளி

*197 வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் கிருத்துவ மதத்தினரால் நீண்ட நாட்களாக நடத்தப்படும் ஊமை, செவிடர்களுக்கான (சுமார் 80 பேர்) பள்ளியை எடுத்து நடத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: இல்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மானாமதுரையில் கிருத்துவ மதத்தினரால் நீண்ட நாட்களாக நடத்தப்படுவது ஊமை, செவிடர் பள்ளி. அதில் சுமார் 80 மாணவர்கள் பாதுகாக் கப்பட்டு பயின்று வருகிறார்கள். ஆனால் அங்கே நிதி நிலைமை சரி யில்லாத காரணத்தால் 80 பேர்களையும் ரோட்டில் விரட்டும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தில் ஊமைகள், செவிடர்கள் போன்ற ஊனமுற்றோர்களுக்கு உதவி செய்கிறார்கள். எனவே, இந்த அரசு வெளியிலே வருகின்ற அவர்களுக்கு ஆதரவு அளித்து, அவர்களுக்கு இருப்பிடம் தந்து ஆதரிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவ ரவர்களே, மானாமதுரையில் கிருத்துவ மதத்தினரால் நடத்தப்படும் சி. எஸ். ஐ. நிர்வாகத்தில் ஒன்று முதல் எட்டு வகுப்புகளைக்கொண்ட காது கேளாதோர் பள்ளி நடைபெற்று வருவது உண்மை. அந்தப் பள்ளிக்கு ஏற்கனவே அரசு 1974-75-ல் அனுமதி அளித்தது. தொடர் அங்கீகாரத்திற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அது பற்றியும் கல்வித்துறையைச் சார்ந்த இயக்குநர் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் இந்த இல்லத்தை அந்த கிருத்துவ சி. எஸ். ஐ. ஆல் விட்டு விடப்படும் நிலைமை ஏற்பட்டிருக் கிறது என்று விண்ணப்பம் போடுமேயானால் அரசு அதை ஏற்று நடத்த ஒருப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஊமை, செவிடர்களுக்காக கிருத்துவ மதத்தால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுக்கிறதா? அப்படிக் கொடுக்கிறது என்றால் ஒவ்வொரு மாண வனுக்கும் எந்த விகிதாசாரத்திலே மானியம் கொடுக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர வர்களே, அரசினுடைய உதவி பெற்று நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பள்ளிகளுக்கு அரசு மானியம், மலைவாசி பகுதியில் படிக்கும் மாணவர்களுக்கு அரசால் ஒரு மாணவனுக்கு 18 ரூபாய் வீதமும், சென்னை போன்ற பகுதிகளில் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு மாணவனுக்கு 14 ரூபாயும், இதர பகுதிகளில் படிக்கும் மாண வர்களுக்கு ஒரு மாணவனுக்கு 13 ரூபாய் வீதமும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. சோலையா: தலைவரவர்களே, மானாமதுரையில் நடை பெறும் ஊமை, செவிடர் பள்ளியில் நிதிநிலைமை சரியில்லை. அதன் மேல் அமைப்புகளிலிருந்தும் போதுமான நிதி வராததால் அது சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறது என்பது அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்குத் தெரிய வந்து, அரசுக்கும் நான் கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, அதற்கு மானியத் தொகை கொடுத்து, அதைக் கலைத்து விடாமல் இருக்க அரசு உறுதி அளிக்குமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவ ரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப் படும்.

பெரம்பலூர் பேரூராட்சியில் ஆயில் என்ஜின் வாங்கல்

*198 **வினா.—டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரம்பலூர் பேரூராட்சியில் குடிதண்ணீர் வழங்குதலுக் கென 7½ எச்.பி. கொண்ட ஆயில் இன்ஜின் வாங்க ரூ. 11,000 அண்மையில் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?